# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 03.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 4599/SCIC/2023**

திரு.ஜெ.புகழ்பாலன் — புகார்தாரர்
எண்.7, கரிகாலன் 2வது குறுக்குத் தெரு
புதுவஞ்சரி, மாடம்பாக்கம்
சென்னை-600 126.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
1 எண். இணை சார்பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
1 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம்
செங்கல்பட்டு.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 22.02.2022 |
| 2. | மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 01.03.2022 |
| 3. | முதல் மேல்முறையீட்டு மனு | 06.09.2023 |
| 4. | மனுதாரரின் புகார் மனு | 18.12.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 08.11.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 27.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "எனக்கு சொந்தமான செங்கல்பட்டு வட்டம், மேல்மணப்பாக்கம் கிராமத்தில் பூர்வீக நிலங்கள் மற்றும் வீட்டு மனை உள்ளது. இதன் ஒரிஜினல் பத்திரம் என்வசம் பாதுகாப்பாக உள்ளது. இந்த நிலங்களுக்கு சர்வே எண்.125-க்க முளலியம்மாள் என்பவர் 2975/1957-ம் வருடம் போலி பத்திரம் செய்துள்ளார். மேலும் முளலியம்மாள் தம்பி தனபால் த/பெ.கணபதி இதே எண்களுக்கு சர்வே எண்.125, 18/5 (வீடுமனை 69 சென்ட்), 179, 93 ஆகிய சர்வே எண்களுக்குரிய நிலங்களை எனது தந்தை 1.M.S.ஜெயபாலன் (2)எனது பாட்டி மேரியம்மாள் (3) எனது பாட்டியின் தங்கை ஞானம், பத்திர எண்.43/1977-ம் வருடம் விற்பனை செய்ததாக போலி பத்திரம் தயார் செய்து செங்கல்பட்டு ரிஜிஸ்டர் ஆபிஸில் போலியாக பதிவு செய்துள்ளார். - தொடர்பாக - மனு நகல்களை தகவல்களாக வழங்கவும்," என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி V.பானுமதி, சார்பதிவாளர், 1 எண்.இணை சார்பதிவாளர் அலுவலகம், செங்கல்பட்டு அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் மனு பொதுத் தகவல் அலுவலர் / பிரிவு அலுவலர்-3 அவர்கள் முதலமைச்சரின் தனிப்பிரிவு, தலைமைச் செயலகம், சென்னை-அவர்களால் பிரிவு 6(3)-ன் கீழ் 01/03/2022 தேதியிட்டு மாற்றம் செய்து பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர் அலுவலகம், செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனினும் அப்போதைய (01/03/2022 தேதிய) பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், செங்கல்பட்டு அவர்கள் மனுதாரருக்கு எவ்வித தகவலையும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, அப்போதைய (01/03/2022 தேதிய) மாவட்டப் பதிவாளர் திரு.R.மணிகண்டன் மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**3. மனுதாரர் 19/01/2022 தேதியிட்டு சில ஆவணங்களை இரத்து செய்யக் கோரி மனு அனுப்பியுள்ளதோடு, 22/02/2022 தேதியிட்டு அனுப்பிய மனுவில் தனது மனு குறித்த சில விவரங்களையும் கோரியுள்ளார். அவ்விரண்டு மனுக்களும் 01/03/2022 தேதியிட்டு பிரிவு 6(3)-ன் கீழ் மாவட்டப் பதிவாளர், செங்கல்பட்டு அவர்களுக்கு, மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து அனுப்பப்பட்டுள்ளது. அம்மனுவின் மீது பதிவுத்துறைச் சட்டம் பிரிவு 68(2) அமலில் இருந்தும் அப்போதைய (01/03/2022) மாவட்டப் பதிவாளர், மனுதாரரின் 19/01/2022 தேதியிட்ட மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் தெரிய வருகிறது. எனவே, உரிய காலத்தில் மனுதாரரின் மனு மீது நடவடிக்கை எடுக்காததற்கு அப்போதைய (01/03/2022) மாவட்டப் பதிவாளர் திரு.R.மணிகண்டன் மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய**

பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

4. மனுதாரர், புகார் மனு அனுப்பியிருப்பதால், ஆணையம் மனுதாரரை, தகவல் (அ) நடவடிக்கை, இவை இரண்டில் எது வேண்டுமென்று கேட்டபோது, மனுதாரர், தான் ஒரு செய்தித் தாளில், பதிவுத்துறைத் தலைவர் அவர்கள், மனுதாரரின் கோரிக்கையின் அடிப்படையில், ஆவணங்களை இரத்து செய்ய மத்திய அரசால் அதிகாரம் அளித்து ஆணை பிறப்பித்துள்ளதாகத் தனக்கு தெரிய வந்துள்ளதாகத் தெரிவித்தார். எனவே தனது 19/01/2022 தேதியிட்ட மனுவை பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்களுக்கு தான் கோரியவாறான ஆவணங்களை இரத்து செய்ய பரிந்துரை செய்து அனுப்ப வேண்டுமென்று மனுதாரர் கோரினார். எனவே, தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / 1 எண்.இணை சார்பதிவாளர் அலுவலகம், செங்கல்பட்டு அவர்கள் மனுதாரர் தெரிவித்த செய்தியை சரிபார்த்து, அவ்வாறு மனுதாரர் தெரிவித்தது உண்மை எனில் மனுதாரரின் மனுவை பதிவுத்துறைத் தலைவர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து மேலனுப்பி, அதுகுறித்த தகவலை மனுதாரருக்கு அனுப்பி வைக்கவும் அல்லது மனுதாரர் தெரிவித்த செய்தி உண்மை இல்லை எனில், அதுகுறித்த தகவலை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல், பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், செங்கல்பட்டு அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கம் ஆகியவற்றினை தமிழ்நாடு தகவல் ஆணையம், SCIC பிரிவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, இத்துடன் இப்புகார் மனு மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்.்தர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். CP 4599/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1. பொதுத் தகவல் அலுவலர்/
1 எண். இணை சார்பதிவாளர்
1 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம்
செங்கல்பட்டு.

2. திரு.R.மணிகண்டன்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர்
(தற்போது) மாவட்டப் பதிவாளர் (தணிக்கை)
நாகப்பட்டினம் பதிவு மாவட்டம். நாகப்பட்டினம்

**புகார்தாரர்**
திரு.ஜெ.புகழ்பாலன்
எண்.7, கரிகாலன் 2வது குறுக்குத் தெரு
புதுவஞ்சரி, மாடம்பாக்கம்
சென்னை-600 126.

நகல்
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-28

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/PC